# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

**<u>உத்தியோகபூர்வ கடன் வழங்குனர்கள் சபைக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையில் கடன் மறுசீரமைப்புக்கான புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்து</u>**

2023 மார்ச் 20ஆம் திகதி இலங்கைக்கான நீடித்த நிதி வசதி திட்டத்தினை சர்வதேச நாணய நிதியம் அங்கீகரித்த நிலையில் இலங்கையின் இருதரப்பு கடன் வழங்குனர்கள் மத்தியில் இலங்கையின் கடன்களை மறுசீரமைப்பதற்கான பேச்சுகளை முன்னெடுக்கும் நோக்குடன் 2023 ஏப்ரல் 13 ஆம் திகதி உத்தியோகபூர்வ கடன் வழங்குனர்கள் சபையானது (OCC) ஸ்தாபிக்கப்பட்டது.

2. அதனைத் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்ட பல சுற்றுப் பேச்சுக்களை அடுத்து 2024 ஜூன் 26 ஆம் திகதி OCC ஆனது புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட்டிருந்தது. தனது பொருளாதார ஸ்திரத்தன்மையினை உறுதிப்படுத்துவதற்காகவும் மறுசீரமைப்பு மற்றும் வளர்ச்சியை நோக்கிய உறுதியான நகர்வினை மேற்கொள்வதற்காகவும் இலங்கை மேற்கொண்ட வலுவான முன்னேற்றகரமான செயற்பாடுகளை இம்மைல்கல் நிரூபிக்கின்றது.

3. பிரான்ஸ் மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளுடன் இணைந்து OCCக்கு இணைத்தலைமை வகிக்கும் இந்தியா, இலங்கையின் பொருளாதார வளர்ச்சி, மற்றும் ஸ்திரத்தன்மையில் வலுவான அர்ப்பணிப்பினைக் கொண்டுள்ளது. இந்த உறுதிப்பாடானது இந்தியாவால் முன்னொருபோதும் இல்லாத வகையில் இலங்கைக்கு வழங்கப்பட்ட 4 பில்லியன் அமெரிக்க டொலர் நிதி ஆதரவு மூலமும் நிரூபிக்கப்பட்டிருந்தது. சர்வதேச நாணய நிதியத்திற்கு நிதி உத்தரவாதங்களை வழங்கிய முதல் கடன் வழங்கும் நாடு இந்தியாவாகும், இதனால் சர்வதேச நாணய நிதியத்தின் உதவித் திட்டத்தைப்பெற இலங்கைக்கு வாய்ப்பு கிடைத்தது.

4. முக்கிய பொருளாதாரத் துறைகளில் நீண்டகால முதலீட்டுத் திட்டங்களை ஊக்குவிப்பதன் ஊடாக இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு இந்தியா தொடர்ந்து ஆதரவினை வழங்கும்.

************************************

**கொழும்பு**
**26 ஜூன் 2024**